**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி பி.கவிதா. பி.ஏ., எல்.எல்.பி,**
**முதன்மை சார்பு நீதிபதி.**

ம.சா. 2 நாள் 05.06.2023

| | | | |
|---|---|---|---|
| O.S. No. | 41/2020 | | |
| பெயர் | இராதாகிருஷ்ணன் | த/பெ | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு சாட்சியாவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான் அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

குறுக்கு விசாரணை

வாதி, பிரதிவாதியை எனக்கு 20 வருடங்களாக தெரியும். பிரதிவாதியை எனக்கு 2010 லிருந்து அவரை காவல் நிலையத்தில் விசாரணைக்கு சென்றபோது தெரியும். வாதி, பிரதிவாதி இடையே தாவா சொத்து சம்பந்தமாக ஏற்பட்ட உடன்படிக்கை பற்றி தெரியுமா என்றால் அவர்கள் ஏதோ பேசி முடித்தது தெரியும். எவ்வளவு சொத்துக்கு, எவ்வளவு ரூபாய்க்கு உடன்படிக்கை போடப்பட்டது என்றால் 1–1/2 ஏக்கர் சொத்துக்கு, ரூ.50,000/–க்கு போக்கியமாக கொடுத்தது தொடர்பாகப் பேசப்பட்டது. ரூ.50,000/– போக்கியம் எழுதியதற்கு நான் சாட்சி கையொழுத்து போட்டேனா என்றால் இல்லை, ஆனால் உடன் இருந்தேன். கிரய ஒப்பந்தம் எப்போது பேசி முடித்தார்கள் என்றால் 2007 ல் பேசி முடித்தார்கள். 2007 காலத்திலிருந்து எனக்கு பிரதிவாதியை தெரியுமா என்றால் தெரியும். கிரய ஒப்பந்த ஆவணத்தில் பிரதிவாதிடம் பணம் வாங்கிய விபரங்கள் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் பிசாஆ1 ஆவணத்தை 2007 ல் வாதி பிரதிவாதி பேசி முடித்த பிறகு பார்த்தேனா என்றால் நான் அந்த ஆவணத்தை பார்க்கவில்லை, அவர்கள் உள்ளே பேசிய போது மட்டும் தான்

உடன் இருந்தேன். வாதி சமாதானமாக போய்விட்டதாக சொன்ன விபரம் எனக்கு தெரியும். 2010 லிருந்து பிரதிவாதிதான் தாவா சொத்தினை சாகுபடி செய்து வருகிறார் என்பது தெரியுமா என்றால் அக்ரிமெண்ட் போட்ட பின்பு பிரதிவாதிதான் சாகுபடி செய்து வருகிறார், பணம் பாக்கி இருந்ததால் அது சம்பந்தமாக சமாதானமாக பேசி முடிக்கப்பட்டதாக வாதி கூறியிருந்தார். போக்கியமாக ரூ.50,000/- கொடுத்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அந்த தொகையை கொடுத்த போது நான் தான் வாதியை அழைத்துச்சென்று வந்தேன். பிரதிவாதியிடமிருந்து வாதி ரூ.50,000/-பெற்றது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நான் பார்க்கவில்லை. ஆனால் வாதி கூறினார். இந்த விபரங்கள் எனக்கு தெரியாது என்றும், வாதி அழைத்ததால் நான் பொய்யாக சாட்சியம் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.